|| ஶ்ரீ꞉ ||

|| ஶ்ரீமதே நிகமாந்த மஹாதேஶிகாய நம꞉ ||

ஸ்ரீமந்நிகமாந்த மஹாதேசிகன் அருளிச்செய்த

பத்தாவது ரஹஸ்யம்.

|| ஶ்ரீமத்ரஹஸ்ய ஸந்தேஶ விவரணம் ||

ஸ்ரீமத் ரஹஸ்ய ஸந்தேச விவரணம்.

ரஹஸ்ய ஸந்தேஶத்தில் ஶரணாகதியினுடைய விஷய ஸ்வரூப பரிகர ஃபல விஶேஷங்களை ப்ரகாஶிப்பிக்கிறது அயமென்கிற இடத்தில் விஷய விஶேஷ

|| ஶ்ரீ꞉ ||

|| ஶ்ரீமதே ஶ்ரீ நிவாஸராமாநுஜ மஹாதேஶிகாய நம꞉ ||

திருவஹீந்திரபுரம் சேட்லூர் வித்வான்

பகவத் விஷயம் பண்டித பூஷணம்

ஸ்ரீ. உ. வே. நரஸிம்மாசார்யர் ஸ்வாமியின்

ஸ்ரீமத் ரஹஸ்ய ஸந்தேஶ விவரண வ்யாக்யானம்.

இந்த ஸ்ரீமத்ரஹஸ்யஸந்தேஶவிவரணம் என்கிற ரஹஸ்யத்தில் கீழ்த் தாமருளிச்செய்த ஸ்ரீமத் ரஹஸ்ய ஸந்தேஶத்தில் வ்யாக்யானம் பண்ணவேண்டிய சில பாகங்களுக்குத் தாமே வ்யாக்யானம் செய்தருளுகிறாராகையினால் இதற்குத் தனித்து மங்களம் முதலியவைகள் அருளிச்செய்யப்படவில்லை. 'விஷய விஶேஷ·' என்கிற இடத்தில்'விஷய'மாவது ப்ரபத்தியாகிற ஜ்ஞான விகாஸத்தினால் விஷயீகரிக்கப்படுகிற ஸர்வேஶ்வரன். இவனுக்கு விஶேஷமாவது தேவதாந்தரங்களுக்கு இல்லாததாயும் ஶ்ரிய: பதியின் கேவல ஸ்வரூபம் மாத்திரத்தைக் காட்டிலும் வேறுபட்ட

மாவது ஶரண்யாகாரங்களு மன்றிக்கே ஸ்வரூபமாத்ரமு மன்றிக்கே பத்நீவிஶிஷ்டனான ஸர்வேஶ்வரன். ஸ்வரூப விஶேஷமாவது துஷ்கரத்வ சிரகால ஸாத்யத்வாதிகளை யுடைத்தான உபாஸநாதிகளிற் காட்டிலும் அதின் பரிகரங்களிற் காட்டிலும் வேறுபட்ட பரந்யாஸம். பரிகரவிஶேஷமாவது யமநியமாதிகளான உபாயாங்கங்களிலும் பக்தி ப்ரபத்திகளிலும் காட்டில் வேறுபட்ட ஆநுகூல்ய ஸங்கல்பாதி பஞ்சகம். ஃபல விஶேஷமாவது ஐஶ்வர்ய

த்தாயிருக்கிற அஸாதாரணமான ஆகாரம், அதாவது பத்நீ, ஸம்பந்தம், குணம், விக்ரஹம் இவைகளோடு கூடிய பரமாத்மா என்றபடி. இதில் உண்மையான ஶேஷியினிடத்தில் ஶேஷமான வஸ்துவை ஸமர்ப்பிவிக்கவேண்டியதாகையினால் **'உபயாதிஷ்டாநம் சைகம் ஶேஷித்வம்', 'அவஶ ஸமைக ஶேஷீ'** என்றிவைமுதலிய ப்ரமாணங்களை யனுஸரித்து ஸ்ரீ, ஶ்ரிய:பதி, ஆகிய இருவரும் ஆத்மாவிற்கு ஶேஷிகளாகையினாலே ப்ரபத்திக்கு உத்தேஶ்யர்கள் என்றபடி. **'ஸ்வரூப'** மாவது உபாயத்தின் ஸ்வரூபம். அதாவது பக்தி யோகத்தின் ஸ்வரூபம் அனேக கால ஸாத்யமாய், ஶ்ரமப்பட்டு முடிக்கக்கூடியதாய் சிரகால ஸாத்யமான அங்கங்களை யுடையதாய் இருக்கிறபடியினால் அப்படிக் கில்லாமல் ஸக்ருத் கர்த்தவ்யமாய் ஸுகரமா யிருப்பதும் ஸுகரமான அங்கங்களோடு கூடியிருப்பதுமான ப்ரபத்தியின் ஸ்வரூபம் இங்கு **விஶேஷ** என்னும் பதத்தினால் சொல்லப்படுகிறது என்று திருவுள்ளம். **'பரிகர'** மாவது அங்கங்கள். அதில் **'விஶேஷ'** மாவது உபாஸனத்தின் அங்கங்களாகிய யம நியமாதிகளைப் போல் துஷ்கரமாயும் அடிக்கடி ஆவ்ருத்தி செய்யவேண்டியதாயு மில்லாமல் ஸுலபமாயச் செய்யக்கூடியதும் க்ஷண கால ஸாத்யமுமான ஆனுகூல்ய ஸங்கல்பாத்யங்கங்கள். **'ஃபலவிஶேஷ'** மாவது **'ஃபல'** மென்பது பொதுவாகப் புருஷார்த்தத்தைச் சொல்லுகிறது.

கைவல்ய ஐச்வர்ய ப்ரயோஜநாந்தரங்களிலும் ஸாமவத்ஸா லோக்யாதிகத்திலும் வ்யாவ்ருத்தமாய் தேசகாலாதி பரிச்சேதமில்லாத கைங்கர்ய பர்யந்தமான பரிபூர்ண ப்ரஹ்மாநுபவம். 'சீலங்கவர்ந்திடும்' என்கிற பாட்டாலே ஸதாசார்ய ப்ரஸாதமடியாக தனக்கு வருகிற விசே

அதில் **'விசேஷ'**மாவது ஐச்வர்யம், கைவல்யம், விஷ்ணுலோகாதி வாஸம் முதலியவைகளைக்காட்டிலும் வேறுபட்டதாய் அளவில்லாத கைங்கர்யம் வரையில் முடிவு பெறுகிற பரிபூர்ண ப்ரும்மாநுபவம் என்றபடி. **'ஸாமவத் ஸாலோக்யாதிகத்திலும்'** என்பதற்கு ஆமோதம் முதலிய விஷ்ணுலோகங்களிலிருப்பது மாத்திரம் முதலிய புருஷார்த்தத்தைக் காட்டிலும் என்று தாத்பர்யம். இங்கு **'ஆதி'** என்னும் பதம் ஸாமீப்யம், ஸாரூப்யம், முதலியவைகளைச் சேர்த்துக் கொள்ளுகிறது. **வ்யாவ்ருத்தமாய்** - வேறுபட்டதாய். **தேசகாலாதி பரிச்சேத** மில்லாத - தேசம், காலம் முதலியவைகளினால் அளவிடப்படாத. இங்கு **'ஆதி'** என்பது வஸ்துவினாலும் அளவிடப் படாததைச் சொல்லுகிறது. **'கைங்கர்ய பர்யந்தமான'** என்பதற்கு அளவில்லாத ஆநந்தரூபமான ப்ரும்மத்தை யனுபவிப் பதினாலுண்டாகிய ஆநந்தம் கைங்கர்யம் செய்யுமளவாக முடிவு பெறுகிறது என்று தாத்பர்யம். இனி கீழ் ரஹஸ்யத்தில் அருளிச் செய்யப்பட்ட பாட்டுக்குத் தாத்பர்ய மருளிச்செய்கிறார்—''சீலங் கவர்ந்திடும்' என்கிற பாட்டாலே' என்றாரம்பித்து. **'ஸதாசார்ய ப்ரஸாதமடியாக'** என்றது ஸதாசார்யனுடைய அநுக்ரஹத்தைக் காரணமாகக்கொண்டு என்று தாத்பர்யம். அதாவது தான் ஒரு வித ப்ரயத்தினம் பண்ணாமலே கேவலம் ஆசார்ய கடாக்ஷத்தினாலே என்றபடி. **'சீலம்'** என்கிற பதம் ஸௌசீல்யம் என்கிற ஆத்ம குணத்தைச் சொல்லி அதன் வழியாக எல்லாக் குணங்களுக்கும் உபலக்ஷணம் என்றும், **'சீலம்'** என்கிற பதம் நல்ல ஒழுக்கத்தைச்

வ்யாக்²யாத்ரு ஸமூஹத்தை அநுஸந்திக்கிறான். ‘சிலர் கவர்ந்திடும்’ என்றது ஸத்குணங்களையும் ஸதாசாரத்தையும் அங்கீகரிக்குமவர்களென்றபடி. ‘தேசிகர்’ என்றது ஆஶ்ரிதரை வழியில்லா வழி போகாதபடி விலக்கி நல்வழி காட்டுகைக்கு நிலவரென்றபடி. ‘தேசின் பெருமையினால்’

சொல்லுகிறது என்றும் இரண்டர்த்தத்தைத் திருவுள்ளம் பற்றி ‘ஸத்குணத்தையும் ஸதாசாரத்தையும்’ என்றருளிச்செய்யப்பட்டது. ‘அங்கீகரிக்குமவர்கள்’ என்பதற்கு ‘கவர்ந்திடும்’ என்கிற பதம் அது முழுமையும் தாங்களே கவர்ந்துகொண்டிருக்கிறார்கள் என்பதைச் சொல்லுகிறது என்று திருவுள்ளம். அதாவது ஸதஸத் விவேகங்களைச் செய்து அஸத்தான குணங்களையும் ஆசாரங்களையும் தள்ளி நல்ல குணங்களையும் ஆசாரத்தையும் தாங்கள் அங்கீகரிக்கிறவர்கள் என்று தாத்பர்யம். ‘தேசிகர்’ என்றது தேசத்தைத் தெரிந்தவர்கள் அல்லது தேசத்தைக் காட்டுகிறவர்கள் என்கிற அர்த்தங்களைச் சொல்லுகிறது என்று திருவுள்ளத்தில் வைத்துக்கொண்டு ‘ஆஶ்ரிதரை’ இத்யாதி அருளிச் செய்யப்பட்டிருக்கிறது. ‘ஆஶ்ரிதரை’ என்பதினால் அபாத்திரத்தில் உபதேஶாதி ப்ரவ்ருத்தி பண்ணுகிறதில்லை, யதாவத்தாக ஆஶ்ரிதர்கள் விஷயத்தில் பரம காருணிகர்களாகையினால் அவர்கள் புருஷார்த்த மடையும் வரையில் நல்ல வழி நடத்துகிறவர்கள் என்பது ஏற்படுகிறது. ‘வழியில்லாவழி’ யாவது ஶாஸ்திரங்களில் விதிக்கப்படாத மார்க்கங்கள். நிலவர்-நிலத்திலிருக்குமவர். அந்தத்தேஶத்திலேயேபழகினவர்களாகையினால் தேசங்களின் நன்மை தீமைகளை நன்றாய்க் கண்டறிந்தவர்கள் என்றர்த்தம். அன்றிக்கே தாங்கள் அந்தத் தேசத்திலிருப்பது ஆஶ்ரிதர்களை நல்ல வழி நடத்துகைக்காக, அதாவது தாங்கள் ஜ்ஞான ஶக்த்யாதிகளினால் பரிபூர்ணராயிருந்த போதிலும் ‘லோகஸங்க்³ரஹமேவாபி ஸம்பஶ்யந் கர்துமர்ஹஸி’ என்கிற ந்யாயமாக உபாயங்களைத் தாங்கள் அனுஷ்டித்தும் அதில் மற்றவர்களை நடக்கும்படி செய்பவர்கள் என்று தாத்பர்யம். லோகத்தாருக்கு அஶக்யமான உபாயங்களை யனுஷ்டிக்கத் தங்களுக்கு ஶக்தி முதலியவைகளிருந்த போதிலும் அதை அனுஷ்டிக்க மாட்டார்கள் என்று தாத்பர்யமாகவுமாம்.

என்றது ஸர்வேச்வரன் இவர்களை ஸநாபிகளோடுங் கூட ரக்ஷிக்கக்கடவோ மென்னும்படி பண்ணின ஆத்மாத்மீய

'தேசிகர்' என்கிற பதத்திற்கு தேசத்திலிருக்கு மவர்கள் அல்லது தேசத்தை அறிந்தவர்கள் என்று அர்த்தம். தேசத்திலிருக்கு மவர்கள் என்றர்த்தமாகும்போது ஆஶ்ரிதர்களை அவ்வழியில் நடத்துவதற்காக என்றும், தேசத்தை அறிந்தவர்கள் என்று அர்த்தமாகும் பொழுது ஆஶ்ரிதர்களை அந்த வழியில் நடத்தக்கூடிய ஜ்ஞானமுடையவர்கள் என்றும் தாத்பர்யம். இவை இரண்டும் 'நல்வழி காட்டுகைக்கு நிலவர்' என்பதினால் ஸங்க்ரஹீதம். "தேசின் பெருமையினால்' என்றது' என்றாரம்பிக்கும் வாக்யத்திற்கு ஆசார்யர்களுடைய தேஜஸ்ஸாவது இவ்விடத்தில் ஶிஷ்யனை தன்னை ஸர்வேஶ்வரன் ரக்ஷிப்பதற்குக் காரணமான அவர்கள் செய்தருளிய வ்யாபாரம், அதாவது அவர்கள் செய்தருளிய ஆத்மாத்மீய பரஸமர்ப்பணம் என்று தாத்பர்யம். இப்படி இவர்கள் செய்தருளின ப்ரார்த்தனைக் கிசைந்து இவர்கள் அனுபந்தி பர்யந்தமாக இவர்களை ரக்ஷிப்பதற்குக் காரணம் இவர்களுடைய தேஜஸ்ஸு என்று தாத்பர்யம். இத்தால் ஆசார்யன் ஶிஷ்யனுக்காக பரந்யாஸம் பண்ணும்பொழுது தனக்கு மோக்ஷார்த்த பாத்தையும் ஶிஷ்யனுக்கு ஜ்ஞான ப்ரதானம் பண்ணும்படியான பாத்தையும் ஸமர்ப்பிக்கவேண்டுமென்றும், ஶிஷ்யனுக்கு மோக்ஷம் வரவேண்டும் என்று பண்ணுவது அஸம்பாவிதம், அப்படி ஶிஷ்யனுக்கு மோக்ஷம் பெறும்படியான உபாயம் ஶாஸ்திரத்தில் காணப்படாமையினால் அந்த உபாயாந்தர ஸ்தானத்தில் பகவானை நிற்கும்படி ப்ரார்த்திப்பது அனுபபன்னம் என்றும் சிலர் சொல்லுவது நிராகரிக்கப்படுகிறது. ஏனெனில் எந்த விஷயத்தைப் பற்றித் தம்முடைய பாத்தை ஸமர்ப்பிக்கிறார்களோ அதே விஷயத்தைப்பற்றி ஆத்மாத்மீய பரஸமர்ப்பணம் பண்ணலாமென்று 'ஆத்மாத்மீய பரந்யாஸத்தாலே' என்று சேர்த்தருளிச் செய்திருப்பதினாலும். எப்படிப்பட்ட ரக்ஷணத்தை இவர்கள் விஷயத்தில் பண்ணுவதாக ஸர்வேஶ்வரன் ஸங்கல்பிக்கிறானோ அப்படிப்பட்ட ரக்ஷணத்தையே இவர்கள் ஆஶ்ரிதர்கள் விஷயத்திலும் பண்ணுகிறான் என்பது 'ஸர்வேச்வரன் இவர்களை ஸநாபிகளோடுங்கூட

ஸாந்த்ராவஸ ஹாவத்தாலே என்றபடி. **'தூலங்களன்ன துரிதங்கள் மாய்ந்தன' என்றது 1 'போயபிழையும்புகு தருவாநின்றனவும் தீயினிற்றூசாகும்' என்று உபநிஷத்**

ரக்ஷிக்கக் கடவோம் என்னும்படி பண்ணின' என்கிறதினலும் ஏற்படுகிறது. ஆசார்யர்கள் தாங்கள் எந்தப் பலத்திற்காகவும் ஆத்மபா ஸமர்ப்பணம் பண்ணலாம், ஸர்வேஶ்வரனும் அதே பலத்தை இவர்களுக்கும் இவர்களுடைய ஆஶ்ரிதர்களுக்கும் கொடுக்கிறுன் என்பது 'தேசின் பெருமையினல்' இத்யாதி வாக்யத்தின் தாத்பர்யம். "தூலங்களன்ன துரிதங்கள் மாய்ந்தன'என்றது' என்பதற்கு 'துரிதங்கள்' என்று பொதுவாகச் சொல்லி இருப்பதினல் உத்தர பூர்வாகங்கள் எல்லாம் ஸங்க்ரஹிக்கப்படுகின்றன. 'மாய்ந்தன' என்பது பூர்வாகங்கள் நஷ்டங்களாயும், உத்தராகங்களில் அபுத்தி பூர்வங்கள் அஶ்லேஷ விஷயமாயும், புத்தி பூர்வங்கள் அதிகாரானுகுண ப்ராயஶ்சித்தங்களாலும் லகு ஶிக்ஷையினலும் கழிந்த படியைச் சொல்லுகிறது. அப்படியே உத்தர பூர்வாகங்கள் கழியுமென்றே உபநிஷத்து முதலிய ப்ரமாணங்கள் உத்கோஷித்திருப்பதினல் என்று தாத்பர்யம். ஸம்ஸ்க்ருதோபநிஷத்தில் 'நெருப்பில் போடப்பட்ட ஊஹமுள் போலவும் பஞ்சுபோலவும் எல்லாப் பாபங்களும்கொளுத்தப் படுகின்றன' என்றர்த்தமுள்ள வாக்யத்தில் பொதுவாகச் சொல்லப் பட்டிருக்கிறதை அனுஸரித்து இங்கும் பொதுவாகச் சொல்லியிருப்பது பூர்வாகத்தை மாத்திரம் குறிக்கிறதென்று சொல்லலாமே. 'மாய்ந்தன (நசித்துவிட்டன)' என்று இறந்தகால வினை முற்றாக ப்ரயோகிக்கப்பட்டிருப்பதனல் பூர்வம் உண்டானதை மாத்திரம் அன்றோ சொல்லவேண்டும். ஆகையினல் உத்தராகங்களையும் சேர்த்துச் சொல்லி யிருக்கிறதென்பதற்கு நியாமகமென்ன என்னில்? அதற்கு ஸமாதான மருளிச் செய்கிறுர்—'போய பிழையும்' என்றாரம்பித்து. போய - இதற்கு முன் செய்யப்பட்டவைகளான, பிழையும் - பாபங்களும், புகுதருவா நின்றனவும்-இனிமேல் புகுறப் போகிறவைகளாக நிற்கிற பாபங்களும், அதாவது உத்தராகங்களும், தீயினில்-நெருப்பில் போடப்பட்ட, தூசு-ஊஹமுள், பஞ்சு முதலிய

1. திருப்பாவை-5.

துச் சொன்னபடியே உத்தரபூர்வாகங்கள் கழிந்தபடியைக் கணிசிக்கிறது. 'துஞ்சல் தருங்கோலம்' என்றது 1 'அநாதி மாயயா ஸுப்த:' என்கிறபடியே ஸுப்த வஸ்தாதி ஜ்ஞாநமில்லாதபடி பண்ணுகிற ப்ராக்ருதசரீரமென்றபடி. 'கழிந்திடக்கூறியகாலம்' என்றது ப்ராரப்

அல்ப பதார்த்தங்களைப்போல், ஆதும்-ஆய்விடும், அதாவது நசித்துவிடும் என்று தாத்பர்யம். இங்கு 'தூசு' என்றருளிச் செய்திருப்பதற்கு பாபம் நசித்தபிறகு பாபம் இருந்து நசித்ததென்றறிய முடியாமல் நசித்துவிடும் என்று தாத்பர்யம். 'என்று **உபநிஷத்து**' என்றது திருப்பாவையை. இத்தால் திவ்ய ப்ரபந்தங்களை வேதம் என்று ப்ரயோகித்திருக்கும் இடங்களிலெல்லாம் '*தமிழ்மறை*', '*மாறன்மறை*' இத்யாதி ரூபேண ஒரு பதத்தோடு சேர்த்து ப்ரயோகிக்கப்பட்டிருக்கிறதே யல்லாமல் தனியாக ஸம்ஸ்க்ருதத்தில்போல வேதம் உபநிஷத் என்று உதாஹரிக்கப்படாமையினால் இது முக்கியமான ப்ரயோகமல்ல என்கிற வார்த்தை உசிதமல்ல, இங்கு திருப்பாவையை ஒரு பதத்தோடு சேராமல் 'உபநிஷத்து' என்று ஸ்பஷ்டமாக ப்ரயோகித்திருப்பதினால். "**துஞ்சல் தரும் கோலம்' என்றது**' என்றாரம்பிக்கும் வாக்கியத்திற்கு 'துஞ்சல்' என்பது மரணத்தைச் சொல்லுகிறது. ஆத்மாவிற்கு மரணமாவது ஆத்ம பரமாத்ம விவேகமில்லாத தசை. '**அன்று** நான் பிறந்திலேன்' இத்யாதி ப்ரமாணங்களிருப்பதினால். ஆகையினால் தீர்க்க நித்திரையென்று சொல்லப்படுகிற மரணத்திற்கு ஸமமாக நெடுங்காலம் தீர்க்கமாய் விடுகிற கர்மங்களினாலுண்டான ஆத்ம பரமாத்ம விவேக சூந்ய தசை இங்கு துஞ்சல்' என்னும் பதத்தினால் அருளிச் செய்யப்பட்டிருக்கிறது. **அநாதிமாயயா ஸுப்த:** - அநாதியான ப்ரக்ருதி ஸம்பந்தத்தினால் தூங்கிக் கொண்டிருக்கிற. இப்படிப்பட்ட ஜ்ஞானமில்லாமைக்குக் காரணமாகிய 'கோல'மாவது வந்தேறியான தேவ மனுஷ்யாதிரூபம், அதாவது ப்ராக்ருத சரீரம் என்று தாத்பர்யம். "கழிந்திடக்

1.

ஶரீரமாகிற சிறையை ஸ்வதந்த்ரனான ஸ்வாமி மாற்றுகைக்கு ப்ரமாண நியதமான ஸமயமென்றபடி. ‘குறித்து நின்றோம்’ என்றது இதற்கு ஸ்வயத்நாபேக்ஷையற ஓடம் பார்த்திருப்பார்க்கு ஓடம் வருமாப்போலே இது ஸ்வயமாகத

கூறிய காலம்’ என்றது’ இத்யாதிக்கு ‘கழிந்திட என்பதினால் பரிபூர்ண ப்ரும்மானுபவமாகிற புருஷார்த்தத்தை விட அநிஷ்டமாகிய ஶரீர நிவ்ருத்தி சிறந்த ப்ரயோஜனம் என்றதினால் இதின் தீவ்ரமான அநிஷ்டத்வம் சொல்லப்பட்டது என்று திருவுள்ளத்தில் வைத்துக்கொண்டு ப்ராரப்த ஶரீரம் ‘சிறை’யென்றருளிச் செய்யப்பட்டிருக்கிறது. ப்ராரப்தஶரீரம் இப்பொழுது எடுத்திருக்கும் ஶரீரம். ‘கூறிய காலம் என்பதற்கு ப்ரமாணங்களில் சொல்லப்படுகிற ஸமயம் என்று தாத்பர்யம். அதாவது ப்ரபன்னர்களின் ஆர்த்தி தாரதம்யத்திற்கீடாக இவர்கள் அபேக்ஷித்தபடியே ஸர்வேஶ்வரன் ஸங்கல்பிக்கிறான் என்றருளிச் செய்யப்பட்டிருப்பதினால் அப்படி இவர்களால் அபேக்ஷிக்கப்பட்டதும் பகவானால் ஸங்கல்பிக்கப்பட்டதுமாகிய காலம் என்று தாத்பர்யம். “குறித்து நின்றோம்’ என்றது’ இத்யாதி- ‘ஸ்வயத்நாபேக்ஷையற’ என்பதற்குத் தன்னுடைய ப்ரயத்தினத்தை அபேக்ஷிக்காமலே என்றபடி. ‘ஓடம்பார்த்திருப்பார்க்கு’ என்பதுடன் அக்கரையேற என்று சேர்த்துக்கொள்ளவும். ‘ஓடம் வருமாப்போலே’ என்கிற த்ருஷ்டாந்தத்தினால் ஓடத்தை எதிர்பார்த்திருப்பவனுக்கு எப்படி ஓடக்காரனுடைய ப்ரயத்தினத்தைத் தவிர தன்னுடைய ப்ரயத்தினம் ஒன்றுமில்லையோ அதைப்போல என்று தாத்பர்யம். இவ்விடத்தில் ‘ஸம்கல்வக்ஷணஹாரோ கிம்கரஸ்து ஹவஸாஸ்ரோக ஜமஹிரே। அணகேஹா தம்ஸம்வணவொஷ அஸ்வ்ராண கிவாஸீரணெ ணவ்உதெத்தா॥’ (ஸஜ்ஜ்வ கணயார: கிஜ்க்ஷரஸத்ய ஹவஸாமரேஜதி மஹீரே। அநவஸ்க்ஷம் வருணவொத: க்ஷுத்ரா கரவாஸீரணெ நப்ரவ்யத்த:॥)’ ‘விஷ்ணுபோதம் விநா நாந்யத் கிஞ்சிதஸ்தி பராயணம்’ இத்யாதிகளை இங்கனுஸந்திப்பது. ஸ்வயமாகதமாய்-

மாய் அணித்தாகப்பெற்றோமென்றபடி. 'மேலிங்கு நாம் பிறவோம்' என்றது ஸதாசார்ய ப்ரஸாதத்தாலே ஶரீராரம்பஹேதுவான ப்ராரப்தகர்மாம்ஶமும் கழியப்பெற்ற நாம் இருள் தரு மா ஞாலத்துள் து:க்கஹேதுவான ஶரீரபரிக்ரஹம் பண்ணோமென்கிறது. 'வேலைவண்ணனை மேவுதுமே' என்றது ஸம்ஸாரஶ்ரமபரிதாபஶமனமான

தானேகிடைத்ததாய். அணித்தாக-ஸமீபத்திலிருக்கிறதாக. "மேலிங்கு நாம் பிறவோம் என்றது" இத்யாதி—மேல்-இனிமேல், அதாவது இப்படி ஸதாசார்ய அனுக்ரஹத்தினாலே கர்மங்களெல்லாம் கழியப்பெற்ற பிறகு, இங்கு இந்தப் பூமியிலே. **ஶரீராரம்பஹேதுவான** - இனி மற்றொரு ஶரீரம் எடுப்பதற்குக் காரணமான, **ப்ராரப்த கர்மாம்ஶமும்** - ப்ராரப்த கர்மங்களில் நம்மால் ஒப்புக்கொள்ளப்படாத பாகமும். இருள்தருமாஞாலத்துள் அஜ்ஞானத்தைத் தருகிற விசாலமான பூமியில். **து:க்கஹேதுவான ஶரீரபரிக்ரஹம்** துக்கத்திற்குக் காரணமான ஶரீரத்தையடைவதை, பண்ணோம் - பண்ணமாட்டோம். துக்கஹேதுவான ஶரீரத்தை எடுக்கமாட்டோம் என்றதினால் பகவத் ஸங்கல்பத்தையனுஸரித்த தங்களுடைய ஸங்கல்பத்தினாலே நித்ய முக்தர்கள் பகவானுடைய கைங்கர்யமாகிற மஹா புருஷார்த்தத்திற்கு உபயோகமுள்ள ஶரீரங்களை எந்த லோகத்திலும் அங்கீகரிக்கிறார்கள் என்று உபநிஷத்து முதலியவைகளில் சொல்லியிருப்பது தெரிவிக்கப்படுகிறது. "வேலைவண்ணனை மேவுதுமே' என்றது' இத்யாதி - 'வேலை வண்ணன் என்பதினால் ஸம்ஸாரத்திலுண்டான ஶ்ரமங்களும் தாபங்களும் போகும்படி குளிர்ந்த நிறத்தையுடைய திருமேனியையுடையவன் என்பது தெரிவிக்கப்படுகிறது என்பது '**ஸம்ஸாரஶ்ரமபரிதாபஶமன**மான திருமேனியை யுடையவனை' என்பதினா லருளிச்செய்யப்படுகிறது. ஸம்ஸாரத்திலுண்டாகிய ஶ்ரமம் தாபம் இவைகளை ஶாந்தி செய்யக்கூடிய திருமேனியுடையவன் என்றர்த்தம். கெடுமரக்கலம் கரைசேர்ந்

திருமேனியை யுடையனான ஸ்ரீவெங்கடநாதனை கெடு மரக்கலம் கரைசேர்ந்தாற்போலே சேரக்கடவோம் என்றபடி. இப்படி ஸர்வாநிஷ்ட நிவ்ருத்தியும் நிரதிசயானந்த ரூப பரிபூர்ண ப்ரஹ்மாநுபவமும் உண்டாம்படி

தாற்போலே' இத்யாதி — கெடுமரக்கலம்-கெட்டுப்போன கப்பல், அதாவது விருத்தமான காற்றினால் வேறுதேசத்தில் கொண்டுபோய் விடப்பட்டு கண்ணுக்குத் தெரியாமல் போயிருந்த கப்பல் என்றர்த்தம். 'கரைசேர்ந்தாற்போலே' என்பதற்கு பிறகு பகவத் ஸங்கல்பத்தினால் உண்டாகிய அநுகூலமான காற்று முதலியவைகளினால் சேரவேண்டிய கரை வந்து சேர்ந்தாற்போலே என்றர்த்தம். இந்தப் பாட்டின் திரண்ட தாத்பர்யார்த்தத்தை அருளிச் செய்து நிகமனம்செய்தருளுகிறார்—'இப்படி ஸர்வாநிஷ்ட நிவ்ருத்தியும்' என்றாரம்பித்து. ஸர்வாநிஷ்ட நிவ்ருத்தியும் ஸர்வ பாபங்களினுடைய நாசமும், கர்மம், அவித்யை முதலிய எல்லா அநிஷ்டங்களின் நிவ்ருத்தியும். நிரதிசயானந்தரூப பரிபூர்ண ப்ரஹ்மாநுபவமும் - எல்லை இல்லாத ஆநந்த ரூபமான குண விபூதி முதலியவைகளினால் நிறைந்த பரப்ரும்மாநுபவமும். கூட்டரிய - கூடுவதற்கு அசக்யங்களான, திருவடிக்கள் கூட்டினை - திருவடிகளின் இரண்டை, நான் கண்டேன் - நான் ப்ரத்யக்ஷமாக அநுபவித்தேன். இது 'க்ருதார்த்தனாகிறான்' என்பதோடு அந்வயிக்கிறது. க்ருதக்ருத்யனான தான் அப்படிப் பட்ட பரிபூர்ணாநுபவம் பெறுவதற்குச் செய்யவேண்டிய உபாயத்தை அநுஷ்டித்திருக்கும் ப்ரபன்னனாகிய தான். க்ருதார்த்தனாகிறான் - க்ருதார்த்தனாக தன்னை அநுஸந்திக்கிறான். புருஷார்த்தம் கிடைப்பது நிச்சயமாகையினால் அதைப் பெற்றவனாகத் தன்னை யநுஸந்திக்கிறான் என்று தாத்பர்யம். கீழ் அவதாரிகையில் 'ஸாக்ஷாத்க்ருதார்த்தத்தையநுஸந்திக்கிறான்' என்றரு

கூட்டரிய திருவடிக்கள் கூட்டினை நான் கண்டேனென்று க்ருதக்ருத்யனை தான் க்ருதார்த்தனாகிறான்.

இதி ஸ்ரீ கவிதார்க்கிகஸிம்ஹஸ்ய ஸர்வதந்த்ரஸ்வதந்த்ரஸ்ய ஸ்ரீமத்வேங்கடநாதஸ்ய ஸ்ரீமத்வேதாந்தாசார்யஸ்ய க்ருதிஷு
॥ ஸ்ரீமத்ரஹஸ்யஸந்தேஶ விவரணம் ஸம்பூர்ணம் ॥

॥ ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேஶிகாய நம: ॥

ளிச் செய்திருப்பதினால் இவ்விடத்திலும் 'க்ருதார்த்தனாகிறான்' என்பதற்கு அப்படி இங்கும் அநுஸந்திக்கிறான் என்று தாத்பர்யம்.

ஸ்ரீமத் ரஹஸ்ய ஸந்தேஶ விவரண
வ்யாக்யானம் முற்றிற்று.
